Registered as aNewspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (28-12-65) இதழ் 319

விசுவாவசு மார்கழி 13 றமழான் பிறை 4 செவ்வாய்க்கிழமை

## 'ஈழநாடு' பஞ்சாங்கம்

வழமைபோல் 'ஈழநாடு' புதுவருடப் பஞ்சாங்கம், புதிய விடுமுறை தினங்கள், திதி, நட்சத்திரம், சமயப் பெருநாட்கள் முதலிய சகல அம்சங்களுடனும் 'ஈழநாடு' வாசகநேயர்களுக்கு 1-1-1966-ல் இலவசமாகக் கிடைக்கும். அன்றைய 'ஈழநாடு' பத்திரிகைப் பிரதிக்கு வாசகநேயர்கள் தங்கள்பகுதிகளிலுள்ள 'ஈழநாடு' விற்பனையாளரிடம் முற்கூட்டியே பதிவுசெய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். விற்பனையாளர்களும், முற்கூட்டியே 'ஈழநாடு' விநியோகப்பகுதி மனேஜருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

— நிர்வாகி, ஈழநாடு.

# 'இடமாற்றம் அரசியல் பிரச்னையல்ல'

## ஆசிரியர் மத்தியில் உடுப்பிட்டி எம். பி.

யாழ்ப்பாணம், செவ். ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக அரசாங்க சேவைக்கமிஷன் போன்று ஒரு சபையே கவனிக்க வேண்டுமென்றும் தனிப்பட்ட ஒருவர் இதைச் செய்வது முறையல்லவென்றும் தாம் அபிப்பிராயப்படுவதாக உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் வட மாகாண ஆசிரியர் சங்கம், வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் ஆகியவைகளின் கூட்டுச்சபையின் அழைப்பின்மீது அவைகளின் கூட்டத்தில் கூறியதாக அறியப்படுகிறது.

தென்னிலங்கையில் தமிழாசிரியர் பற்றுக்குறை இருப்பது உண்மைதான் என்றும் இப்பிரச்னையைச் சுமுகமான ஒரு திட்டத்தை உருவாக்கிச் சமாளிக்க வேண்டுமென்றும் திரு. சிவசிதம்பரம் கூறியதாக அறியப்படுகிறது. ஆசிரியர் இடமாற்றத்தை ஓர் அரசியல் பிரச்னையாக்க தாங்கள் விரும்பவில்லையென்றும் அவர் கூறியதாகத் தெரிகின்றது.

## எதிர்வழக்கும் போராட்டமும்

### அரசினர் தமிழர் ஆசிரியர் தகவல்

யாழ்ப்பாணம், செவ்வாய் இடமாற்ற உத்தரவு பெற்ற, வட இலங்கையில் உள்ள ஆசிரியர்கள் அந்த இடமாற்ற உத்தரவுகளை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தால் அதை எதிர்த்து வழக்காடி, இடமாற்றத்தை ஏற்று கடமையை ஏற்கும்வரை, வட பகுதியில் மேலதிகமாக இருக்கும் அந்த ஆசிரியர்களின் சம்பளத்தை நிறுத்தவும் அரசாங்கத்தை ஆதரிக்கவும் சட்ட நடவடிக்கையில் இறங்கவும், அவர்களது போராட்டத்தை எதிர்த்து எதிர்ப் போராட்டம் நடத்தவும் வடபகுதியிலும் தென்பகுதியிலும் உள்ள அரசினர் தமிழ் ஆசிரியர்களும் அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்திலிருந்து பிரிந்த வெளிமாகாண ஆசிரியர்களும் சில பெற்றோர் ஆசிரியர் சங்கங்களும் திட்டமிட்டுள்ளன.

இத்தகவலை அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கப் போஷகர் திரு. ஆ. க. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ளார்.

## "தலைமை ஆசிரியர்களின் ஆலோசனை அவசியம்"

### இடமாற்றம் பெற்றஆசிரியர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ். தென்னிலங்கையில் மூடப்பட்ட தமிழ்ப் பாடசாலைகளையும், பொதுப் பாடசாலைகளில் மூடப்பட்ட தமிழ்ப் பிரிவுகளையும் மீண்டும் திறப்பதற்கு நடைபெற்ற தமிழாசிரியர்களின் இடமாற்றத்தினுல், வடமாகாணத்திலுள்ள உடும்பிராய் சைவ வித்தியாசாலையில், உயர் வகுப்புகள் மூடப்படக்கூடிய நிலையிலுளளது. அப்பாடசாலையில், எஸ். எஸ. சி. வகுப்புகளுக்கு போதித்த 5 ஆசிரியர்களுக்கு இடமாற்றக் கடிதம் கிடைத்துள்ளது. இவர்கள் பூமிசாஸ்திரம், சரித்திரம், இலக்கியம், பாஷை, சுகாதாரம், சமயம் ஆகிய பாடங்களைப் போதித்து வந்தார்கள். 5 ஆசிரியர்களின் இடமாற்றத்தினுல் எஸ். எஸ். ஸி. வகுப்புகளை மூடவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

யாழ்ப்பாணம்ஆனைப்பந்தி உயர்கலா மன்றத்தில் நேற்றுக் காலை இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடசாலை அதிபர்கள், தலைமையாசிரியர்கள் மகாநாட்டில் உரும்பிராய் சைவ வித்தியாசாலை தலைமையாசிரியர் திரு. எஸ். பொன்னுத்துரை மேற்கண்ட விபரத்தை வெளியிட்டார்.

வடமாகாண ஆசிரியர்கள் சங்கத் தலைவர் திரு. வ. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்றஇக்கூட்டத்தில் திரு. எஸ். பொன்னுத்துரை மேலும் கூறியதாவது: எனது பாடசாலையில் உயர்தரவகுப்பில் படிக்கும் மாணவர்களை வேறு பாடசாலைகளுக்குச் செலலும்படி கூறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் ஆசிரியர்

(6ம் பக்கம் பார்க்க)

## இராணுவமுகாம் சிதறிப்போனது!

### சைகோனுக்கருகே வெடிவிபத்து: 14 பேர் கொல்லப்பட்டனர்

சைகோன், டிச. 27 சைகோனுக்கு தென்மேற்கேஇன்று காலை இராணுவமுகாமொன்றில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக இந்த முகாம் சுக்குநூருக சிதறிப் போய்விட்டது.

வியட்காங்கியரின் கண்ணிவெடிமூலமே இந்த பயங்கர விபத்து ஏற்பட்டிருக்கிறது என்று முதலில்கிடைக்கப்பெற்ற செய்திகள் கூறுகின்றன.

வெடிவிபத்து காரணமாக பதினுன்குபேர் மாண்டனர். நாற்பதுக்கு மதிகமானவர்கள் காயமடைந்தனர். அமெரிக்காவின் ஒன்பதாவது தரைப்படை டிவிஷன் பகுதிக்குள் இந்த முகாம் உள்ளது. வெடிவிபத்தில் அமெரிக்கர்கள் எவரும் கொல்லப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாவலர் சந்தி படுகொலை

### மோட்டார் காரை பிணையில் விட மறுப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய் நாவலர்சந்திப் படுகொலை வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ரி. ஜே ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகளான சீனி இரத்தினம், சுப்பிரமணியம், சண்முகம் ஆகிய மூவரும் ஆஜர் செய்யப்பட்டனர். இரசாயனப் பரிசோதகரின் அறிக்கை கிடைத்துவிட்டதென மாஜிஸ்திரேட்டிடம் தெரிவிக்கப்பட்டது.

எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் மோட்டார் காரைப் பிணையில் விடும்படி கேட்டபோது, நீதிபதி மறுத்துவிட்டார்.

எதிரிகள் சார்பில் அட்வகேட் திரு. ரி. கணேசலிங்கம் திருவாளர்கள் எஸ். செல்லத்துரை, ஆர். விஸ்வநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராஞர், வழக்காளிதரப்பில் அட்வகேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் திரு. தளையசிங்கம் யோகநாதனின் அனுசரணையுடன் ஆஜராஞர்.

மாஜிஸ்டிரேட் எதிரிகளை தொடர்ந்து ரிமாண்டில் வைக்கும்படி உதரவிட்டு, விசாரணையை ஜனவரி 10-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

## தமிழரசு - காங்கிரஸ் நேரடிப் போட்டி

### இன்று நடைபெறும் மாநகரசபை 15-ம் வட்டாரஇடைத் தேர்தல்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாண மாநகர சபையின் 15-ம் வட்டாரத்துக்கான இடைத்தேர்தல் இன்று நடைபெறுகிறது. இத்தேர்தலில் தமிழரசுக் கட்சியும் தமிழ்க்காங்கிரசும் நேரடியாகப் போட்டியிடுகின்றன. தமிழரசுக் கட்சியின் சார்பில் திரு. நீ. அந்தோனிப்பிள்ளையும் தமிழ்க்காங்கிரஸ் சார்பில் திரு. ஜிம்மி ராஜரத்தினமும் போட்டியிடுகின்றனர்.

தமிழரசுக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டு மாநகரசபையில் இந்த வட்டாரத்தின் பிரதிநிதியாக அங்கம் வகித்த திரு. பீ.ச. சோமசுந்தரம் தமது பதவியை ராஜிஞமாச் செய்ததால் இந்தஇடைத்தேர்தல் நடைபெறுகிறது.

பிரபல வழக்கறிஞரும் தமிழ்காங்கிரஸ் பிரமுகர்களில் ஒருவருமானதிரு. ஜிம்மி ராஜரத்தினம், சென்றமுறையும இவ்வட்டாரத்தில் போட்டியிட்டவர். இந்த வட்டாரத்தின் பிரதிநிதியாகத் தாம் தெரிவுசெய்யப்பட்டால் இந்தவட்டாரத்திலுள்ள சந்தானமாதா கோவில் ஒழுங்கை, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, கடுக்காயடி ஒழுங்கை, நரிக்குண்டு ஒழுங்கை, பாரதி வீதி, மருதடிவீதி ஒழுங்கை, இராசாவின் தோட்டம், ரெம்பிள்ரோட் முதலான இடங்களுக்கு மின்சார வசதி செய்யவேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரிவித்தார். உப்புத்தண்ணீர் உள்ள பகுதிகளுக்கு குழாய்நீர்விநியோகம் செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்வதாகவும் இப்படுதியில் வீடில்லாது கஷ்டப்படும் மக்களுக்கென வீடமைப்புத் திட்டமொன்று ஏற்படுத்த முயற்சி செய்யவிருப்பதாகவும்அவர் கூறினர்.

சிங்களம் மட்டும் சட்டம் காரணமாக அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற திரு நீ, அந்தோனிப்பிள்ளை தமிழரசுக்கட்சிநடத்திய மொழி உரிமைப்போராட்டங்களிலும் முன்னின்றுழைத்திருக்கிறர்.

தாம் இவ்வட்டாரப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டால் யாழ்ப்பாண மாநகரசபையில் நீண்டகாலமாக நிலவி வருவதாகக்கூறப்படும் ஊழல்களை ஒழிப்பதற்காகவும் பதினைந்தாம் வட்டாரத்தில் மின்சாரம் இல்லாது இருந்துவரும் பாரதிவீதி, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கடுக்காயடி ஒழுங்கை முதலான இடங்களுக்கு மின்சார அபிவிருத்தி செய்யவும் உப்புத்தண்ணீர் உள்ள இராசாவின்தோட்டம் ரோட், கச்சேரிகிழக்குஒழுங்கை, றக்காரோட், நாவலர்வீதி முதலான இடங்களுக்கு குழாய் நீர் விநியோகம் செய்யவும் முயற்சியெடுக்கப் போவதாகத் தெரிவித்தார்.

## 'ஈழநாடு' வாரமலர்

இதுவரை ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவந்து வாசகநேயர்களுக்கு அறிவை வளர்க்க விருந்தளித்த 'ஈழநாடு' வாரமலர் புத்தாண்டு தொடக்கம் ஓய்வுநாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள போயா தினங்களில் வெளிவருமென்பதை வாசகநேயர்களுக்கும், பத்திரிகை விற்பனையாளர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் அறிவித்துக்கொள்கின்றோம்.

அடுத்த 'ஈழநாடு' வாரமலர் 6-1-1966ல் வெளிவரும்.

— நிர்வாகி, ஈழநாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாசகம்

தாயஸ்திதியில் ஆதாமிடம் நன்னாட்டங்கள் மட்டும் இருந்தன. நம்மில் நன்னாட்டங்களும், துர்நாட்டங்களும் உண்டு. நாட்டங்களின் உறைவிடமான நமது இயற்கை புத்திக்கு முற்றும் அமைந்ததல்ல. எனவே சிலவேளைகளில் நமது நாட்டங்கள் முன் கிளர்ந்தெழுந்து, நமது புத்தியின் ஆலோசனை சத்தியைத் தடுத்துவிடுகின்றன. நமது புண்ணியத்தின் தொழில் அவைகளைச் சீர்ப்படுத்துவதே.

—அர்ச் அக்தோமையார்.

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 387

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மார்கழி மீ 13 உ (28-12-65)

## மீண்டும் வியட்நாம் சண்டை

வியட்நாமில்கிறிஸ்மஸ் 'சண்டைநிறுத்தம்' கூட நீடிக்கவில்லை. மீண்டும் அங்கு கடும் சண்டை நடைபெறத் தொடங்கி விட்டது. சண்டையை நிறுத்த தென்வியட்நாம் அரசாங்கமும் அமெரிக்காவும் ஒப்புக் கொண்டு கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி 30 மணிநேரத்துக்கு சண்டையை நிறுத்த தனது துருப்புக்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. வியட்காங்கியரும் கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி சண்டையை நிறுத்த உத்தரவிட்டிருந்தனர். பன்னிரண்டு மணிநேரம் அங்கு அமைதி நிலவியது. சண்டையை நிறுத்த வேண்டுமென்று கோரிவந்த மக்கள் இந்த அமைதியைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். தற்காலிக சண்டை நிறுத்தம் நிரந்தர சமாதானத்துக்கு வழிவகுக்கலாமென நம்பியவர்கள் நிரந்தர சண்டை நிறுத்தம் ஏற்பட்டு நிரந்தர சமாதானம் நிலவ வேண்டுமென விரும்பினர்.

ஆனால் அங்கு நிலவிய அமைதி பன்னிரண்டு மணி நேரத்துக்கு மேல் நீடிக்கவில்லை. வியட்காங்கியர்தான் முதலில் சண்டை நிறுத்தத்தை மீறிப் பழிவாங்கும் நோக்கத்துடன் உக்கிரமான முறையில் தாக்குதல் ஆரம்பித்ததாகச் செய்திகள் கூறுகின்றன. சண்டையை மீண்டும் ஆரம்பித்ததற்கு அவர்கள் காரணம் கூறக்கூடும். அவர்கள்பக்கம் நியாயமும் இருக்கக்கூடும். இருபக்கத்திலும் துப்பாக்கியை ஏந்தியபடி அமைதியை நிலைநிறுத்துவதென்பது சுலபமல்ல. துப்பாக்கி பிடித்தவன் கை சும்மா இருக்குமென எதிர்பார்க்கவும் முடியாது. என்றாலும் வியட்நாமில் அமைதியேற்படுவதற்கு வியட்காங்கியரே தடையாக இருக்கின்றனர் என்ற பழிச்சொல்லை இந்தச் செயல்மூலம் அவர்கள் உறுதிப்படுத்தி விட்டனர் என்றுகொள்ள இடமுண்டு.

1964-ம் ஆண்டில் மட்டும் 1800 வியட்நாம் பொதுமக்கள் கொல்லப்பட்டனரென்றும் 8000 பேர் காயமடைந்தனரென்றும் 7000 பேர் கடத்திச் செல்லப்பட்டனரென்றும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. 1965-ம் ஆண்டில் இதுவரை எத்தனையாயிரம் மக்கள் அநியாயமாக அவர்கள் செய்யாத குற்றத்துக்காக உயிர் இழந்தனரோ?

சண்டையை நிறுத்தவும், சமரசப் பேச்சு நடத்தவும் அமெரிக்கா தயாராக இருப்பதாக அதிபர் அறிவித்திருக்கிறார். தற்காலிகமாக ஏற்பட்டிருந்த சண்டை நிறுத்தச் சந்தர்ப்பம் தவறிவிட்டாலும் நிரந்தர சண்டை நிறுத்தம் ஏற்பட உலகநாடுகள் இனியும் சலிப்படையாது முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

## ஈரவெங்காயத்துக்கு கட்டுப்பாட்டுவிலை!

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் இப்பொழுது ஈரவெங்காயத்துக்கு கட்டுப்பாட்டுவிலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதை விவசாயிகளும், பொதுமக்களும் நிச்சயம் வரவேற்பார்கள்.

ஈரவெங்காயம் யாழ்ப்பாணக் குடாநாட்டில்தான் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்திசெய்யப்படுவதால் இதற்கு இங்கு விலை நிர்ணயிக்கப்படாது இருந்தது. உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட போதிலும் சமீபகாலத்தில் அதன் விலை உச்சமடைந்தது. கொழும்பில் ரூத்தல் ஒன்று 28, 30சதமாக ஈரவெங்காயம்வாங்கக்கூடியதாக இருந்த போதிலும் யாழ்ப்பாணத்தில் ரூத்தல் ஒன்று 50, 60 சதமாக விற்கப்பட்டது. வெங்காயத்தின் விலை அதிகரித்த போதிலும் இதனால் விவசாயிகள் பயன்பெறவில்லை. தரகர்களே பயன் பெற்றனர். ஏற்கனவே வாழ்க்கைச்செலவு உயர்வைத் தாங்கமுடியாது உள்ள மக்கள் மேலும் கஷ்டமடைந்தனர். ஈரவெங்காயத்துக்கு யாழ்ப்பாணக்குடாநாட்டில் கட்டுப்பாடுவிலைநிர்ணயிக்கப்பட்டுள்ளது பாராட்டக்கூடியதாகும். இதேபோல் உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட போதிலும் வெளியூர்களைவிட அதிக விலையில் விற்கப்படும் பொருள்களுக்கும் விலை நிர்ணயிக்கப்பட்டால் வாழ்க்கைச்செலவு உயர்வை ஓரளவாவது குறைக்க வழிபிறக்கும்.

## மா-ஸே-துங் பிறந்த தினம்

பீகிங், டிச. 27


மா-ஸே-துங் தனது 72 வது பிறந்ததினத்தை அமைதியாகக் கொண்டாடியதாக செய்திகள் கூறுகின்றன.

நேற்று அவரது பிறந்த தினமாகும். ஆனால் அவரது பிறந்ததினம்குறித்து பொது வைபவங்கள் எதுவும் நடைபெறவில்லை. சீனப் பத்திரிகைகளிலும்செய்திகள்வெளியிடப்புடவில்லை.

கம்யூனிஸ்ட் சீனத்தலைவர்களின் பிறந்த தினங்கள் உத்தியோக பூர்வமாகக் கொண்டாடப்படுவதில்லை.

மா-ஸே-துங்கின் நடமாட்டங்கள் பத்திரிகைகளில் வெளியாவதில்லை. அவர் எங்கு இருக்கிறார் என்பது குறித்தும் தகவல் எதுவும் இல்லை, ஒருமாத காலத்துக்குமுன்னர் அவர் பொது வைபவமொன்றில் கலந்து கொண்டார்.

(பி. டி. ஸி.)



# ஆசிரியருக்கு கடிதங்கள்

## தமிழ் ஆசிரியர்களின் இன்றைய இடமாற்றப் பிரச்னை

அரசினர் பாடசாலை ஆசிரியர்கள்காலத்துக்குக்காலம் இடமாற்றங்களின் உத்தரவுகளைப்பெற்று ஆங்காங்கு சென்று இதுகாலவரை தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்றி வாழ்ந்தார்கள் என்ற உண்மையை இன்றுவரை வித்தியாதிபதி அவர்கள் ஒப்புக்கொள்வர்.

பாடசாலைகள் யாவும் தேசியபாடசாலைகளாக வேண்டும் எனவும் அரசினர் பாடசாலைகளின் ஆசிரியர்களாகவேண்டுமெனவும் விரும்பியோர்களின் விருப்பத்திற்கு அமைய; பிரத்தியேக பாடசாலைகள் தவிர ஏனைய பாடசாலைகள் அனைத்தும் அரசாங்க பாடசாலைகள்எனவே என்ற கொள்கை நடைமுறைக்கு வந்தது.

இக்கொள்கைக்கிணங்க தனியார் பாடசாலைகள் தவிர்ந்த எல்லாப்பாடசாலைகளும், ஆசிரியர்களும் அரசினர் பாடசாலைகள் எனவும், அரசினர் ஆசிரியர்கள் எனவும் முறையே வகுக்கப்பட்டனர். இவ்விதிகளுக்கு அமைய வீட்டு வாடகைப் பணம், இலவச புகையிரதச் சீட்டுக்கள் ஆதிய சலுகைகளைச் சகல ஆசிரியர்களும் பெற அரசாங்கம் வழிகளை வகுத்ததும் அச்சலுகைகளைப்பெற்றதும் மறைக்கப்படாத உண்மைகளாம்.

கருமங்கள் இவ்வாறு இருக்க எம்மை இதுகாறும் அரசினர் பாடசாலை ஆசிரியர்கள்ஆக அனுமதிக்கவில்லை என்றும் சலுகைகளைத் தரவில்லையென்றும் முதுமுறை அட்டவணை தயாரிக்கப்படவில்லையென்றும் ஆகவே எங்களுக்கு இடமாற்றம் தரக்கூடாது என்றும் வருடத்தின் பதிெனராம்மாத ஆரம்பத்தில் நொண்டிச் சாட்டுகளைக்கூறி இடமாற்றங்களை இரத்துச்செய்யுங்கள் என்று கேட்பது பொருத்தமா?

சொந்தவீடுகளில் இருந்து சொந்தவீடுகளையே திருத்துவதற்கு பொருத்தமான தொகையை வீட்டுவாடகைகளாகப்பெற்று; கதிர்காமம், சிவனொளிபாதமலைஆதியாம் யாத்திரைஸ்தலங்களை முதல்முதலாக தரிசிப்பதற்கு இலவச புகையிரதப் பிரயாணச் சீட்டுகளைப் பெற்றும் சுகபோகங்களை அனுபவிக்கும் ஆசிரியர்கள் தங்களது நடுப்பிராய வயதில்தானும் இடமாற்றங்களைப்பெற்று பல வருடங்களாக தங்களது சொந்தஊர்களுக்குப் போகமுடியாமல் அல்லலுறும் அரசினர் பாடசாலை ஆசிரியர்களுக்கு மீட்சி அளிப்பதற்கு முன்வராமல் இருப்பது நீதியா?

அரசினர் பாடசாலை ஆசிரியர்களின் குழந்தைகளின் படிப்பு ஓர் இடம், மனைவி மக்கள் இன்னொரு இடம், ஆசிரியன் மூன்றும் இடம் இம்மூவிடச் செலவுகளை ரூபா88உடனும் ஏனைய சகாயப்பணிகளுடனும் சரிக்கட்ட முடியுமா?

யாழ். குடாநாட்டில் வதியும் ஆசிரியர் மேற்படி மூவகைச் செலவுகளையும் செய்கின்றாரா? இல்லை.

அடுத்ததாக வடகிழ்மாகாணங்கள் தவிர்ந்த பிறஇடங்களில் அரசினர் பாடசாலை ஆசிரியன் தமது காணியின் வேலிகளையோ குடிசைகளின் திருத்தங்களையோகால்நடைகளின் வளர்ப்புக்களையோ பார்க்கத் தருணம் கிடைக்குமா? தமது குத்தகைக் காணியிலும் கொடுக்கப்பட்ட நெற்காணிகளின் நிலைமையைப்பார்க்க அவகாசம் கிடைக்குமா? இந்நிலையில் வெலிமடையிலும், கந்தப்பளையிலும் அம்பாறையிலும் பத்தாண்டுகளுக்குமேற் கடமையாற்றி அல்லற்படும் அரசினர் அசிரியர்களுக்கு மீட்சி கொடுக்கப்படுவது நியாயமா? அநியாயமா?

''ஓலைகளை ஓடுகளாக்கினேம்; மண்ணை மணலாக்கினேம் ...'' மாற்றங்களுக்கு உடன்படுவதாக சேவையிற் சேர்ந்திவோம் என்று கூறுகின்றனர் புதிய வர்க்க ஆசிரியர்ஆசிரியர்கூட்டத்தினர். அரசினர் பாடசாலை ஆசிரியர்களும் குடிசைகளை, களிமண் கொட்டில்களை, காட்டுத் தடிகளைக்கற்கட்டடங்களாகவும், ஓடுகள் பதித்த கூரைகளாகவும் மாற்றவில்லையா? அறியாமையில் மூழ்கிய, கல்வி அறிவற்ற பகுதியினரை ஓரளவு அறிஞர்களாகவும், பண்பாடுகள் நிறைந்த மாந்தர்களாகவும் மாற்றவில்லையா? எனவே இவ்வகை வேண்டா விவாதங்களை ஆக்கினாலும் உள்ள உண்மை தெள்ளிதிற் புலப்படுகின்றது அன்றோ.

வித்தியாபகுதியாரின் கூட்டுச்சபைகளின் அரங்கில் எழுப்பிய குரலோசைகளின் பிரதிபலனாக, ''ஆசிரியர்கள் கலந்து மாற்றப்படவேண்டியவர்களே ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு எனத் தயாரிக்கப்பட்ட மாற்றவிதிகளுக்கு அமைய ஆசிரியர்களும் இடமாற்றம் பெற வேண்டியவர்களே. என்ற நியதிக்கமைய ஆசிரியர்களின் இடமாற்றம் நடைபெறுவது நியாயமே என்ற தாழ்மையான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்துநிற்கும்

செ. கந்தையா

(ஓமந்தை மகாவித்தியாலய அதிபர்) 34 வருடம் 24 வது பாடசாலையில் சேவை செய்யும் அரசினர் பாடசாலை ஆசிரியன்.

ஃ ஃ ஃ

## ஆசிரியர்கள் பதில் சொல்லட்டும்!

பல ஆண்டுகளாக அரசாங்க ஆசிரியர்களின் உரிமை கோரினர்கள். உரிமைகள் மாத்திரம்தான் வேண்டும். மாற்றம் மட்டும் கசக்கிறதா?

வெளியூரில் சேவை செய்யும் ஆசிரியன் இலவச பிரயாணச் சீட்டு 3 சோடி வீட்டுவாடகை பெறுகிறான். அதில் நியாயமுண்டு. வடமாகாணத்தில் சேவை செய்யும் ஆசிரியனுக்கும் அந்த உரிமை அவசியந்தானா?

அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரித்தபொழுது முகாமைக்காரரிடமிருந்து விடுதலை பெறுகிறோமென்று திருப்தியற்றதுடன் 'இலங்கையின் எப்பகுதியிலும் சேவை செய்யத் தயார்' என்று அரசாங்கத்துடன் ஒப்பமிட்டுக் கொடுத்தார்கள்? அதனை இதற்குள்ளாகவா மறந்துவிட்டார்கள்?

மறந்தது மட்டுமல்ல. வேலைநிறுத்தம் செய்வோம். ஆர்ப்பாட்டம் செய்வோம். ஊர்வலம் போவோம். மாற்றம் செய்தால் அரசாங்கத்தின்மீது வழக்குத் தொடருவோமென்று முழங்குகிறார்களே. இது எவ்வாறு பொருந்தும்?

மாற்றத்தைத் தடை செய்யாவிட்டால் ஆயிரக்கணக்கான வாக்குகளால் அடுத்த தேர்தலில் தோற்கடிப்போமென்று பாராளுமன்ற உறுப்பினர்களைப் பயமுறுத்துகிறார்கள். இந்நிலையில் அவர்கள் நீதியின் வழி நிற்பார்களா? பயமுறுத்தலுக்கு அடிபணிவார்களா?

வடமாகாணத்திலேயே திறமையான ஆசிரியர்கள் உண்டு. வெளிமாகாணங்களிலுள்ளோர் இங்கு கடமையாற்றத் தகுதியில்லை எனக் குரலவையிடும் திறமைசாலிகள் இலங்கையெங்கணும் தமிழ்மணம் வீசச் செய்வதன்றோ முறை. யாழ்ப்பாணத்தில் மட்டும் தமிழ் வளர்ந்தாற் போதுமா?

இவற்றை ஒவ்வொரு ஆசிரியரும் சிந்தித்துத் தமது நெஞ்சையே தட்டிக் கேட்டால் உண்மை புலனாகும்.

ச. சின்னத்துரை.
அளவெட்டி.

ஃ ஃ ஃ

## தன்கையே தனக்குதவி

ஆசிரிய தராதரப்பத்திர ஆசிரியர் சம்பளப் பிரச்னை விடயத்தில் எம். ஈ. பி. அரசாங்கம், கூட்டரசாங்கம், தேசிய அரசாங்கம் ஆகிய அரசாங்கங்களும், வித்தியா பகுதியினரும் அதிலுள்ள முரண்பாட்டைச் சரியென ஒப்புக் கொண்ட நிலையில் மேலும் மேலும் ஊக்கப்படுத்துவாரில்லாத தன்மையால் செயல்படாது கிடக்கிறது. இனிமேல் பெரிய சங்கங்கள் என்று சொல்லப்படும் சங்கங்களை நம்பி இருப்பதால் உருப்பட முடியாது. அவர்களுக்கு இடமாற்ற வழக்கு, ஊர்வலம், பொதுக்கூட்டம் முதலிய பல சோலிகள் உண்டாகி உள்ளன. (1963-ல் மறந்துவிட்டனர், இந்நிலையில் எம் சங்கத்தினர் அவர்களை முற்றாக நம்பியிராது அவர்களுடன் சேர்ந்து மண்டையைப் போட்டு உடைக்காது நாமே. நமக்காகப்போராட வேண்டும். அதற்காக ஆசிரிய தராதரப் பத்திர ஆசிரியர்கள் யாவரும் பேதமின்றி ஓரே சங்கமாக உழைப்பதே சிறந்தது. பெரிய சங்கங்கள் என்ற பெயரளவில் உள்ள சங்கங்களுடனுள்ள தொடர்புகள் அங்கத்துவம் யாவற்றையும் நீக்கி, நாம் ஒன்று சேருதல் வேண்டும். தற்போது நடைமுறையிலிருந்துவரும் ஆசிரிய தராதரப்பத்திர ஆசிரியர் சங்கங்கள் ஒன்றாகி உடனே செயல்படத் தொடங்கட்டும். காலங்கடத்தினால் நட்டமடைபவர் நாமே.

ஓர் ஆசிரிய தராதரப்பத்திர ஆசிரியன்.

ஃ ஃ ஃ

## மீண்டும் வெளியே அனுப்புவதா?

வட இலங்கையிலிருந்து, வெளிமாகாணங்களிலுள்ள தமிழ்ப்பாடசாலைகளின் பற்றாக்குறை ஆசிரியர் இடங்களை நிரப்புவதற்காகச் சமீபத்தில் இடமாற்றம் நடைபெறவிருப்பதாகப் பத்திரிகைகள் மூலம் அறிகின்றோம்.

தென் இலங்கையிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையின் காரணமாக அப்பாடசாலைகளை அரசாங்கம் மூடியிருப்பதும், மூடவிருப்பதும் நாமனைவரும் அறிந்ததே. இதனால் எதிர்வரும் காலங்களில் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்கு செல்வோர் தொகை குறைந்து, நம் ஆசிரியர் சமுதாயத்தினர் தொகை குறையவும்கூடும். பற்றாக்குறைவான இடங்களைப் புதியநியமனம்மூலம் நிரப்ப வேண்டுமாயின் ஜி. சி. ஈ. பரீட்சையில் சித்தியடைந்த புதிய மாணவர்களை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகளுக்குத் தெரிவுசெய்யவேண்டும். அம்முயற்சியைச் செய்வோரும் நம்மவரிடையே இல்லை.

1-1-60க்குப் பின் வெளிமாகாணங்களிலிருந்து மாற்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்நாமில் முழுவீச்சில் யுத்தம் ஆரம்பம்

## வியட்காங்கியர் கடும் தாக்குதல்; அமெரிக்க படைக்கு புதிய உத்தரவு

### சண்டையை நிறுத்தும்படி பாப்பரசர் மீண்டும் கோரிக்கை

சைகோன், டிச. 27

வடக்கு, தெற்கு வியட்நாமில் யுத்தம் முழு வீச்சில் நடந்துகொண்டிருப்பதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. முப்பது மணிநேர கிறிஸ்மஸ் யுத்த நிறுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து வியட்காங்கியர் தங்களது தாக்குதல்களைத் தீவிரமாக்கிக் கொண்டதை தொடர்ந்து முழுவீச்சில் யுத்தத்தை நடத்துமாறு அமெரிக்க துருப்புகளுக்கும் தென் வியட்நாம் துருப்புகளுக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்காவின் தரை, விமான எதிர்ப்பு நடவடிக்கைகள் முன் எப்பொழுதுமில்லாத வகையில் தீவிரமடைந்திருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

#### வியட்காங்கியர் தீவிரதாக்குதல்

கிறிஸ்மஸ் யுத்த நிறுத்தம் முடிவடைந்த பின்னர் வியட்காங்கினர் தங்களது தாக்குதல்களைத் தீவிரப் படுத்தியிருக்கின்றனர். இவர்கள் நேற்று மட்டும் ஆறு இடங்களில் கூட்டுத் தாக்குதல்கள் நடத்தியிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

#### 17 பேர் மாண்டனர்

சைகோனிலிருந்து தெற்கே நேற்று வியட்காங்கியர் தீவிரமான தாக்குதல்கள் நடத்தியதைத் தொடர்ந்து 17 தென் வியட்நாம் துருப்புகள் கொல்லப்பட்டனர். மற்றுமொரு கட்டத்தில் இவர்கள் அமெரிக்க விமானத்தளமொன்றுக்கு அருகே நடத்திய தாக்குதல்களில் 18 அமெரிக்க அதிகாரிகள் காயமடைந்தனர்.

### பாப்பரசர் மீண்டும் கோரிக்கை

இதற்கிடையே பாப்பரசர் போல் வட, தென் வியட்நாம் தலைவர்களுக்கும் அமெரிக்க அதிபருக்கும் மீண்டும் சமாதானக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கிறிஸ்மஸ் யுத்த நிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடிக்குமாறும் இந்த யுத்த நிறுத்தத்தை நிரந்தரமாக்கிக் கொள்ளுமாறும் பாப்பரசர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

தென் வியட்நாமிலுள்ள அமெரிக்க அதிகாரிகள் நேற்று கருத்து வெளியிடுகையில், பாப்பரசரின் சமாதானக் கோரிக்கையை அமெரிக்காவும் தென் வியட்நாமும் ஏற்றுக் கொண்டிருக்கிறதென்றும், ஆனால் வியட்காங்கியரின் தாக்குதல்கள் இப்பொழுது கடுமையாக இருப்பதால் எதுவும் செய்யமுடியாத நிலையில் தாங்கள் இருப்பதாகவும் கூறினர்.

### காட்டுத் தீ 600 கால்நடைகள் கருகி மாண்டன

புவனர்ஸ் அயர்ஸ், டிச. 27

புவனர்ஸ் அயர்ஸில் நேற்று ஏற்பட்ட பெரும் காட்டு தீக்கு சுமார் அறுநூறு ஆடுகளும் மாடுகளும் பலியாகின. கால்நடைகள் கருகி மாண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

இத் தீயினால் ஒருலட்சம் ஏக்கர் விவசாய நிலம் நாசமாகிவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

### சீனு குற்றச்சாட்டு

பீகிங், டிச. 27

அமெரிக்க, தென்வியட்நாம் துருப்புகள் கம்போடியாவுக்குள் ஊடுருவியிருப்பதாக சீனு குற்றம் சுமத்தியுள்ளது.

### விவசாயிகள் கழக புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், ஞாயிறு

வடலியடைப்பு 'எல்லாளன்' விவசாயிகள் கழக வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. அ. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. திரு. குமாரசாமி தமது தலைமையுரையில் நாட்டின்பொருள் வளர்ச்சிக்கு இளம் விவசாயிகள் தொண்டு மிகவும் அவசியமாகும் என்றும் படித்த வாலிபர்கள் தமது நேரத்தை வீணேபோக்காமல் உணவு உற்பத்தி, கால்நடை வளர்த்தல் கோழிப் பண்ணை போன்ற வற்றில் அதிகம் ஈடுபட முன்வர வேண்டும் என்றும் கூறினார்.

நடப்புவருட உத்யோகத்தர்கள் வருமாறு: போஷகர்கள் தா. சுப்பிரமணியம், க. இராசரத்தினம். தலைவர் த. ஆறுமுகதாசன். உப தலைவர் ச. மகேந்திரன். காரியதரிசி ச. நாராயணன்.

## கிறிஸ்மஸ் கிபத்து

### அமெரிக்காவில் மட்டும் 612 பேர் மாண்டனர்

வாஷிங்டன், டிச. 27

கிறிஸ்மஸ் விடுமுறையின் போது அமெரிக்காவில் ஏற்பட்ட வீதிவிபத்துகளினால் 612 பேர்மாண்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் தினத்தின் போது சுமார் 300 பேரும் அதற்கடுத்த இருதினங்களிலும் 300 பேரும் இந்த வீதிவிபத்துக்களுக்கு பலியாகியிருக்கின்றனர்.

கடந்த வருடம் கிறிஸ்மஸ் விபத்துகளுக்கு 52 பேர் மட்டுமே அமெரிக்காவில் பலியானார்கள். 1956-ம் ஆண்டில் சுமார் 700 பேர் மாண்டனர்.

மாண்டவர்கள் தவிர காயமடைந்தவர்கள் சுமார் நூறு பேர் என்றும் அறிவிக்கப்பட்டத.

### கி. பாகிஸ்தான் புரட்சி சபை

டாக்கா, டிச. 27

சுதந்திர கிழக்கு பாகிஸ்தானியர் நிறுவியுள்ள வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் தடை விதித்துள்ளது. இவர்களின் துண்டுப்பிரசுரங்களையும் யாரும் வைத்திருக்கக்கூடாதுஎன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

கிழக்குப்பாகிஸ்தான் புரட்சி சபையைச் சேர்ந்த ஆயிரக்கணக் கானவர்கள் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அதேநேரத்தில் கிழக்கு பாகிஸ்தான் புரட்சி சபையினர் தங்களது நடவடிக்கைகளை நகரப்பகுதிகளிலிருந்து கிராமப் புறங்களுக்கு விஸ்தரித்துள்ளனர்.

### தொழிலாளர் வேலைநிறுத்தம் தற்காலிக நிறுத்தம்

டோக்கியோ, டிச. 27

ஜப்பானில் கடந்த ஒரு மாதகாலமாக வேலைநிறுத்தம் செய்துவந்த துறைமுகத் தொழிலாளர்கள், தங்களது வேலை நிறுத்தத்தை நேற்று தற்காலிகமாக நிறுத்திக் கொண்டனர்.

தங்களது கோரிக்கைகளை வழங்காவிட்டால் அடுத்த மாதம் மீண்டும் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப் போவதாக இவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தினால் ஐந்நூறு சரக்குக் கப்பல்களும் ஆயிரம் சிறிய வள்ளங்களும் பாதிக்கப்பட்டிருந்தன.

### தாயகம் திரும்பினர்

பம்பாய், டிச. 27

இந்திய-பாகிஸ்தான் சண்டையின்போது காவலில் வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தானியர்களில் 1,500 பேர் நேற்று பம்பாயிலிருந்து பாகிஸ்தானுக்கு கப்பல்மார்க்கமாக அனுப்பிவைக்கப்பட்டனர்.

## கிறிஸ்மஸ் பரிசாக 17-வது குழந்தை

சிட்னி, டிச. 27

பிரிட்டிஷ் பிரஜையான திருமதி டொரிஸ் பேர்கின் கிறிஸ்மஸ் தினத்தன்று ஒரு பெண் குழந்தையொன்றைப் பிரசவித்தார். இது அவரது பதினேழாவது குழந்தையாகும். இச் சிசுவின் நிறை பதினொரு றுத்தல் ஆறு அவுன்ஸாகும்.

''எனக்குக் கிடைக்கப்பெற்ற அருமையான கிறிஸ்மஸ் பரிசு இது'' என்று திருமதி டொரிஸ் பேர்கின் தெரிவித்துள்ளார்.

தாயார் தனது 17-வது குழந்தையை ஆஸ்பத்திரியில் சுகமாகப் பிரசவித்த நேரத்தில் அவரது 14 குழந்தைகளும் (இரு குழந்தைகள் இல்லை) வீட்டில் இருந்து, தந்தை சமைத்துக் கொடுத்த ''கிறிஸ்மஸ் இரவு உணவை'' ருசிபட சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். இக் குழந்தைகளில் 10 பேர் பெண்கள். 4 பேர் ஆண்கள். இக்குழந்தைகள் இரண்டு வயது தொடக்கம் இருபத்தியொரு வயதுவரையுள்ளன. (பி.டி.ஸி.)

### ''சனசமூக நிலையங்களின் நோக்கம்''

உடுப்பிட்டி, திங்கள்

''கிராம மக்களுக்குத் தொண்டு செய்வதற்காகவே சனசமூக நிலையங்கள் அமைக்கப்பட்டன. சனசமூக நிலையங்கள் பெயரளவில் மட்டுமிருக்காது கிராமத்திற்கு நன்மையளிக்கக் கூடிய பல ஆக்கப்பணிகளில் ஈடுபடவேண்டும். எமதுமத்தியில் எவ்வளவோ படித்த இளைஞர்களிருந்தும் தங்கள் திறமையை வெளிப்படுத்தமுடியாது உள்ளனர். இவர்களனைவரையும் ஒன்று திரட்டி விவசாயப்பணியில் ஈடுபடுத்தி ஊக்குவிக்க வேண்டும். இதன்மூலம் வேலையில்லாப் பிரச்னையை ஓரளவில் கட்டுப்படுத்தமுடியும்.''

கரணவாய் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் திரு. எஸ். கனகரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். திரு. க. சண்முக சுந்தரம் தலைமைவகித்தார்.

உபகாரியதரிசி வே. சண்முகலிங்கம். தனதிகாரி பொ. தர்மரத்தினம் நிர்வாகசபை அங்கத்தவர்கள்: ஆ. தங்கராசா, வே. சற்குணநாதன், சி. தனபாலசிங்கம், சி. சண்முகநாதன்.

'தலைமையாசிரியர்

### இடமாற்றத்தை ரத்துச்செய்க'

#### கிராமசபை கோரிக்கை

மாவிட்டபுரம், திங்கள்

கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு. வ. கந்தையாவின் இடமாற்ற உத்தரவை ரத்துச்செய்யும்படி தெல்லிப்பழை கிராமசபை ஏகமனதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றிக் கல்வியமைச்சருக்குத் தெரிவித்துள்ளது.

கிராமசபையின் விசேஷ கூட்டம் திரு. த. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது திரு. வ. கந்தையாவின் சேவைநலத்தைப் பாராட்டியும், அவர் நகுலேஸ்வர வித்தியாலயத்தைத் தோற்றுவித்து அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு இன்று உயர்ந்த நிலைக்கு கொண்டுவந்துள்ளதையும் பாராட்டிப் பலர் பேசினர். இடமாற்றத்தை ரத்துச் செய்யக்கோரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு கல்விமந்திரிக்கும், வித்தியாதிபதிக்கும், காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

கருகம்பனை இந்துசமய விருத்திச் சங்கம், நகுலேஸ்வர வித்தியாலயப் பழைய மாணவர் சங்கம் மற்றும் ஊர்ப் பிரமுகர்கள் அனைவரும் திரு. வ. கந்தையா

(5-ம் பக்கம் பார்க்க)

## 'பொருளாதாரத்தடை: ரொடீஷியா பாதிக்கப்படாது

### கம்யூனிஸ்ட் நாடுகளிடமிருந்தும் எண்ணெ வாங்குவோம்'

— பிரதமர் அயன்ஸ்மித்

ஸாலிஸபரி, டிச. 27

ரொடீஷியாமீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடைகளினால் ரொடீஷியா பாதிக்கப்படமாட்டாதென்று ரொடீஷியா 'கலக அரசாங்க'ப் பிரதமர் திரு. அயன் ஸமித் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை நிருபர்களுக்கு அவர் அளித்த ஒரு பேட்டியில், ரொடீஷியாவின் சில நெருக்கடிகள் குறித்துக் கருத்து வெளியிட்டிருந்தார் எண்ணெய்த் தடைகள் பற்றி அவர் குறிப்பிடுகையில், ரொடீஷியாமீது பிரிட்டனும் மற்றும் சில நாடுகளும் எண்ணெய்த்தடை விதித்திருந்ததைத் தொடர்ந்து ரொடீஷியா தற்காலிகமாகப் பாதிக்கப்பட்டிருந்தாலும் நிலைமையைச் சமாளிக்கமுடியுமென்றார்.

கம்யூனிஸ்டு நாடுகளிலிருந்து எண்ணெய் வாங்கும் யோசனை எதுவும் உண்டா என்று ஒரு நிருபர் கேட்டதற்கு திரு. அயன் ஸ்மித் பதிலளிக்கையில் ரொடீஷியாவுக்கு எண்ணெய் விநியோகம்செய்ய எந்த நாடும் முன்வருமானால் அந்த நாட்டுடன் தொடர்புகொள்ள தயங்கமாட்டோமென்றும் இதற்கு கம்யூனிஸ்டு நாடுகள் மட்டும் விதிவிலக்கல்ல என்றும் கூறினார்.

கம்யூனிஸ்டு நாடுகளிடமிருந்து எண்ணெய் வாங்கிக்கொள்ளவும் ரொடீஷியா தயாராகவிருக்கிறதென்றும் பிரதமர் திரு. அயன் ஸ்மித் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலிட்டியில் கைத்தொழில் பயிற்சிக் கலாசாலை

## பட்டினசபை நிலம் வழங்க முடிவு

மாவிட்டபுரம், திங்கள் மயிலிட்டியில் கைத் தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்கு மயிலிட்டி சந்தைக் கருகில் காணி வழங்குவதற்கு காங்கேசன்துறை பட்டினசபையின் விசேஷ கூட்டத்தில் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் சூரு வளியினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படும் புயல்நிவாரண உதவியாக மயிலிட்டியில் கைத்தொழிற் கலாசாலை அமைப்பதற்கு நிலம் வழங்கும்படி வலி. வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசபிள்ளை காங்கேசன்துறைபட்டினசபைத் தலைவர் திரு. சு. கிருபாமூர்த்திக்கு எழுதிய கடிதத்தில் மயிலிட்டி வீடமைப் புத்திட்டத்தில் காணி தரும்படி கேட்டிருந்தார். இது பற்றி, பட்டினசபையின் விசேஷ கூட்டம் நடைபெற்றபோது ஆலோசனை செய்யப்பட்டது. கைத்தொழிற்கலாசாலை அமைக்க மயிலிட்டி சந்தைக்கருகில் நிலம்வழங்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காங்கேசன்துறை பொலிஸ்நிலைய தலைமை அதிகாரி திரு. ரி ஏ. போவி கொழும்புக்கு மாற்றலாகிச் செல்வதனையிட்டு அவரின் சேவைநலம் பாராட்டி ஒரு தீர்மானம் நிறைவேறியது.

காங்கேசன்துறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. வை டி. செனரத்தினதும் நிலையத்தலைமை அதிகாரி ஏலையோரினதும் சேவையைப் பாராட்டுமுகமாகவும் அண்மையில் நடைபெற்ற சபையின் தேர்தலில் அவர்கள் ஆற்றிய சிறந்த சேவையினைப் பாராட்டுமுகமாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதோடு இவற்றின் பிரதிகளை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அனுப்பிவைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கணக்குப்பரிசோதகரின் ஆலோசனைப்படி சோலைவரி அறவிடுவதற்கு 3 வரியறவிடுபவர்களை நியமிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

---

நவாலி, செவ்.

நவாலி சென். பீட்டர்ஸ் கோஷ்டிக்கும் வட்டுக்கோட்டை கிழக்கு சிவன் கோஷ்டிக்குமிடையே நேற்று நடைபெற்ற சைப்பந்தாட்டப் போட்டியில் சென். பீட்டர்ஸ் கோஷ்டி 2—0 'கேம்' களால் அமோக வெற்றி பெற்றது. ஏ. தேவராஸ் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்,

---

# 'சைவத்துக்குமாருன வழக்குகளில் ஆஜராகவேண்டாம்'

## சைவ வழக்கறிஞர்களுக்கு வேதாகமபூஷணம் வேண்டுகோள்

### சைவமகாநாட்டு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் கோயில் பலிநிறுத்தம் சம்பந்தமான வழக்கின் தீர்ப்பையொட்டி 1968-ம் ஆண்டுக்கு முன்னரே பலி வெட்டாது தடுப்பதற்கு வடமாநில சைவமாமன்றம் பொதுமக்களிடையே பிரசாரம் செய்யவேண்டுமென்றும் சைவசமயத்துக்கு மாருன விஷயங்கள்பற்றிவழக்குகள்வந்தால் அவ்வழக்குகளில் சைவசமய வழக்கறிஞர்கள் ஆஜராகக் கூடாது என்றும் வேதாகமபூஷணம் கு. பாலசுந்தரக் குருக்கள் வடமாநில சைவ இளைஞர் மாமன்றத்தின் ஆதரவில் நடைபெறற சைவமகாநாட்டில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை நாவலர்சைவப் பிரகாச வித்தியாசாலையில் திருமுறை ஓதலுடன் ஆரம்பமான மகாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிக்கு திரு. சி. உ சோமசேகரம் தலைமைவகித்தார். அவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:—

### இளைஞர்கள் கையிலுள்ளது

இளைஞர்கள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு. நாட்டின்முனனேற்றம் இளைஞர் கையில்தான் தங்கியிருக்கிறது. தொழிற் கல்வி வேண்டுமெனப் பலர் வற்புறுத்தி வருகின்ருர்கள். ஆனுல் அதிகமான இளைஞர்கள் தொழிற் கல்வியை விரும்பாதவர்களாக இருக்கின்ருர்கள். எதிர்காலத்தில் இந்த நாட்டில் தொழிற் கல்விக்குத்தான் முக்கிய இடம்கிடைக்கும். ஆதலால் தொழிற்கல்வி பயில்வதில் இளைஞர்கள்அக்கறைகாட்ட வேண்டியது அவசியமாகும்.

இளைஞர்கள் சிந்தனு சக்தியை வளர்த்தால் வாழ்க்கை சிறந்து விளங்கும். சமயவளர்ச்சியில் அக்கறை காட்டி, இளைஞர்கள் முழுச் சக்தியையும் செலவு செய்ய வேண்டும். சக்தியை அதிகரிக்கும் பொருட்டு, தியானம், சிந்தனை, வழிபாடு ஆகியவற்றை சிறப்பாகச் செய்யவேண்டும்.

### புதுமைகள் செய்யலாம்

அந்தக்காலத்தில் முனிவர்கள் பல புதுமைகள், விநோதங்கள் அற்புதங்கள் செய்துள்ளார்களென அறிகிருேம். அதே போல் இக்காலத்திலும் புதுமைகள் செய்யலாம். முற்காலத்திலும் பார்க்க கூடுதலாகச் செய்யலாமென்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஏனெனில் முற்காலத்தில் ஒரு குறிச்சியில் நடைபெறும் ஆராய்ச்சியை மட்டுமே அறியமுடியும். ஆனுல் இன்று அமெரிக்காவில் நடைபெறும் ஆராய்ச்சியை உடனடியாக அறியமுடியும். சைவ இளைஞர்கள் உண்மையாக செயலாற்றினுல் சக்தியைப்பெறலாம். சக்தியிருந்தால் உலகப்பிரச்னைகளைத் தீர்க்கலாம்.

நாவலர் என்ருல் ஆறுமுக நாவலரைக் குறிப்பதுபோல சமயம் என்ருல் சைவத்தை மட்டும் குறிக்குமென்றும், நல்லதை எடுப்பதும், தீயதை விடுவதும் மரபாக அருக்கிறதென்றும் 'திருக்கோவையில்' இப்படி பிரிவு காட்ட முடியாதென்றும், வித்துவான் இ. திருநாவுக்கரசு கூறினுர்.

நாதலர் இன்று உயிருடனிருந்தால் கல்வியை சீர்படுத்தும் போராட்டத்தை தனித்துநின்று நடத்துவாரென்றும், தற்பொழுது கல்வி சீர்கெட்டுவிட்டதென்றும், நவலருக்கும் அதிகமான விழா எடுத்த இவ்வாண்டிலே, பல்கலைக்கழகத்தில் சில கவலைக்குரிய விஷயங்கள் நடந்ததையிட்டு, வருத்தமடையக் கூடியதென்றும் வழக்கறிஞர் நம. சிவப்பிரகாசம் கூறினுர்.

### அமெரிக்காவில் சைவம்

வேதாகம பூஷணம், கு. பாலசுந்தரக்குருக்கள் பேசும்போது, உலகமெங்கும் இப்பொழுது சைவம் பரப்பப்பட்டு வருகிறதென்றும், அமெரிக்காவில் ஒருவர் சைவத்தை பரப்ப பல முயற்சிகள் எடுத்துவருவதாகவும் கூறினுர்.

### பலியிடுவதுபற்றிய வழக்கு

திரு. பாலசுந்தரக் குருக்கள் மேலும் பேசும்போது கூறியதாவது:-

கோயிலில் பலியிடுவது சம்பந்தமாக வழக்கு கடந்த ஐந்து வருடங்களாக நடைபெற்று, சென்றவாரம் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் பின் சுழிபுரம் பத்திரகாளி அம்மன்கோவிலில் பலிநிறுத்தம் செய்யப்படவேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஆதலால் அதற்குப்பின் பலி வெட்டுவது நிரந்தரமாக நிறுத்தப்பட்டுவிடும். அதற்கு முன்உள்ள மூன்று வருடகாலத்திலும், பலியிடுவதை நிறுத்துவதற்கு வடமாநில சைவ மாமன்றம், பொதுமக்களிடையே பிரசாரம்செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் சைவசமயத்திற்கு மாருன விஷயங்கள் பற்றி வழக்குகள் வந்தால் ஆஜராக வேண்டாமென்று வழக்கறிஞர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

### போட்டி, பூசல் சமாதானத்தை வளர்க்காது

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை கூறியதாவது:-

உலக சமுதாயம், சமய போட்டியின்றி, ஆத்மீக இயக்கத்தை, கடவுளை அடையும் வழியைத்தான் எல்லாரும் நாடுகின்ருர்கள். மற்றச் சமயங்களும், கடவுளை வழிபடுகின்ற சமயங்கள், கடவுளின் அருள் பெற்ற சமயங்கள் என்பதை தற்பொழுது அறிந்துள்ளார்கள். இந்த சூழ்நிலை உலகெங்கும் உருவாகிவருகின்ற . இந்நிலை விரைவில் உருவாகுவதற்கு, சைவசமய மக்கள் உதவவேண்டும்.

சைவசமயத்தில், இறைவனை அடையும் தன்மை வித்தியாசமாக இருக்கின்றது பக்தி உடையவன், பக்தி மார்க்கத்தை பின்பற்றுவான். ஆராய்ச்சி மனப்பான்மையுடையவன் ஞான மார்க்கத்தில் மனதை செலுத்துவான். அனுபவத்தைக் கொண்டு செயலாற்றுபவன் யோகமார்க்கத்தில் ஈடுபடுவான். செயலின்

(5-ம் பக்கம் பார்க்க)


# தந்தையைப்போல் தனயன்



தன் தந்தையைப் போலவே மகனும் ஒஸ்டர்மில்க் அருந்தி, ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வான்.

ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாருத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும் விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.

துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் அருந்தும் குழந்தைகள் பெலனுன சுக வளர்ச்சி பெறுகிருர்கள்.




# ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ—அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபாற் பெட்டி 23, கொழும்பு.

179/66

ஒஸ்டர்மில்க் குழந்தைப் புத்தகம் ஒன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ள கீழ்கண்ட விலாசத்திற்கு 10 சத முத்திரை அனுப்பவும்

பகுதி 50, கிளக்ஸோ-அலன்பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கொழும்பு

செவ்வாய் 28 - 12 - 65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-25 திருவெம்பாவை — வெள்ளவத்தை மாணிக்கவிநாயகர் கோவிலில் இருந்து அஞ்சல், 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 உரைச்சித்திரம்—பங்கயப்பூம்புனல். 7-10 திருப்பாவை, 7-30 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்,

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 குரல்வகை, 7-00 வயலின், 7-30 பஞ்சபாணம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 9-45 நாதசுரம்— வி. சுப்பிரமணியம்.


நியூ
காலிங்கன் சினிமா
(இணுவில்)
எஸ். எஸ். ஆர். - பத்மினி
நடித்த
காட்டுரோஜா

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-45
சண்டியா
(CHANDIYA)
[ சிங்களப் படம் ]


திரைப்பட விமரிசனம்

# பூம்புகார்

கண்ணகி தமிழர் வழிபடும் கற்புத் தெய்வம். அவள் பெண்குலத்துக்கும் தமிழ்குலத்துக்கும் பெருமை தேடித்தந்தவள். அவளது பண்பின் சிறப்பையும் வீரத்தின் மகத்துவத்தையும்தான் 'பூம்புகா'ரில் காண்கின்ரேம்.

கருணாநிதியின் துள்ளியோடும்தமிழ் வசனங்கள், விஜயகுமாரி மூலமாகக் கேட்கும்போது, இனிமைக் கலப்போடு இதயம் நிறைகிறது. ஒரு கணவனுக்கு அன்பான மனைவியின் உபசரிப்பு எப்படியிருக்கும் என்பதை, விஜயகுமாரி தனது அனுபவம் மிக்க நடிப்பால் நன்கு எடுத்துக்காட்டுகிருர். மாதவியிடமிருந்து திரும்பிவந்த கோவலனுக்கு, அன்னம் படைத்து அருகிருந்து விசிறியால் மெதுவாக விசுக்கும்போது அவர் நடிக்கவில்லை, பத்தினி கண்ணகியாகவே மாறிவிடுகிருர். இனிய சுபாவமுள்ள கண்ணகியாக இருந்த அவர், கோவலன் கொலையுண்ட சேதிகேட்டு கொதித்தெழும்போது, 'நீதி பிழைத்துவிட்டது' என்று மதுரை மன்னனிடம்குமுறும்போது, நடிப்பில் மேலும் ஒரு படி உயர்ந்துவிட்டார் என்றுதான் சொல்லவேண்டும். 'பூம்புகா'ரில் 'கண்ணகி' எவ்வளவு பிரதானமானவர் என்பதை தமது பண்பட்ட நடிப்பின்மூலம் நன்கு உணர்த்திவிட்டார் விஜயகுமாரி.

கோவலனுக வரும் ராஜேந்திரனின் நடிப்பு குறைகூறமுடியாதபடி அமைந்துள்ளது. காதல் காட்சிகளிலும் 'சொந்த மனைவிக்குத் துரோகம் செய்துவிட்டோமே' என மனம் நோகும் காட்சிகளிலும் அவரது நடிப்பு சிறப்பாக இருக்கிறது.

சுந்தராம்பாளின் இனிமையான குரலைக் கேட்கும் வாய்ப்பை 'பூம்புகார்' ஏற்படுத்தியுள்ளது. கோவலன் கொலையுண்டதும் அவர் பாடும் 'நீதியே' என்ற பாட்டு குறிப்பிடத்தக்கது.

மாதவியாகவரும் ராஜஸ்ரீ கவர்ச்சியாக நடனமாடுகிருர்.

நாகேஷ் — மனோரமா நகைச்சுவை, காலவழு நிறைந்து படத்தின் தரத்தை ஓரளவு பாதிக்கிறது என்று சொல்லத்தான் வேண்டியிருக்கிறது.

யாழ்ப்பாணம் வெலிங்டனில் திரையிடப்பட்டுள்ள 'பூம்புகார்' குடும்பத்தோடு சென்று பார்க்கலாம். —கணேஷ்.

## கிறிஸ்மஸ விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்வாய்

நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்குழுவினரால் கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு வண. கட்டளைக் குரவர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில், மாநகர சபை உறுப்பினர் திரு. நீ. அன்ரனியினல் ஆரம்பித்து வைக்கப்பெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் விபரம் வருமாறு:-

சைக்கிள் ஓட்டம்: வே. சற்குணம், மு. வின்சன், செ. விற்ருலிஸ்.

விநோதஉடைப் போட்டி; சிறுவர்- நீ. மாலினி, நீ. ரோகினி.

குண்டெறிதல்; மு. ஜெயரெட்ணம், பெ. ஜேக்கப், சூ. றெஜிஸ்.

பலூன் உடைத்தல்(பெண்கள்) : ம. மரியசுசி, ச. சந்திரா, ஆ. சகாயமரி.

மெதுவான சைக்கிள் ஓட்டம்: பி. இ. யோசேப், மு. வின்சன், யோ. தனம்.

சங்கீதக் கதிரை (பெண்கள்): செல்வி. வ. சொலமன்.

தொப்பி போடுதல் (ஆண்கள்): மு. அருளானந்தம்.

மரதன் ஓட்டம்: சி. நாதன், செ. அருளப்பு, ப. அந்தோனிப்பிள்ளை.

440 யார் ஓட்டம் (சிறுவர்): ம. பாலதுரை, ம. யேசுராசா, நே. நேசரத்தினம்.

ஊசி நூல் கோர்த்தல்: ம. யசிந்தா, ம. மரியசுசி, யே. றெஜினு.

880 யார் ஓட்டம்: செ. ஆசைத்துரை, செ. அருளப்பு, செ. விற்ருலிஸ்.

100 யார் ஓட்டம்; ம. கனியூட், ம. யேசுராசா, பி. யஸ்ரின்,

## 'சைவத்துக்கு . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்மை பின்பற்றுவன் தர்மயோகத்தை பின்பற்றுவான். இப்படி வழிகளுக்கு ஒரு எல்லை உண்டென்று கூறமுடியாது. மனம், உடல் பரிணமம் மாறிக்கொண்டு வரும்.

மற்றசமயங்களை தூற்றுவதால் ஒரு சமயத்தை வளர்க்க முடியாது. போட்டி பூசலினுல் எந்த சமயத்தையும் வளர்க்க இயலாது. இந்தப் போட்டி பூசல், அரசியல், சமுதாயம், வியாபாரம், அடக்கியாளும் மனப்போக்கினுல் ஏற்படுகிறதேயன்றி சமயத்தினுல் ஏற்படுவதல்ல.

மனிதனுக்காகத்தான் சமயம். சமுதாயத்திற்காகத்தான் சமயம். சமயத்திற்காக சமுதாயமல்ல. ஆணவச் செருக்கும் அறியாமையும் இருக்கும் வரை சமயத்தை வளர்க்கக் முடியாது. ஆறுமுகநாவலரின் அடிப்படைத் தத்துவத்தை எல்லோரும் அறிந்துகொண்டால் ஒற்றுமையாக வாழலாம்.

ஆசிரியர் மு. வைத்திலிங்கம், -பிரமஸ்ரீ ஐ. கைலாயநாதக் குருக்களும் பேசினுர்கள்.


10-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) விஜிதா (ஹட்டன்) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை)

எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடிக்கும்
எங்கவீட்டுப் பிள்ளை

இப்பொழுது நடைபெறுகிறது
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
பத்தினிப் பெண் சிந்தைக்கினிய கிளி!
சீறி எழுந்தால் புலி! எனும் இலக்கணம் உருவாக்கிய
சீரிய தலைவி கண்ணகியின் வரலாறு.
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்,
ராஜஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடிக்கும்
பூம்புகார்
டைரக்‌ஷன் — நீலகண்டன்.
கதைவசனம் — மு. கருணாநிதி.
இசை — சுதர்சனம்.

REGAL—JAFFNA
NOW SHOWING
GERAD BARRAY
GIANNA MARIA CANALE
In
CLASH Of STEEL
(Franscope - Color)



## வரி விளம்பரம்

### கல்வி

ஸ்ரீநாக விகாரை சிங்களப் பாடசாலையில் சிங்கள வகுப்புகள் மாலையிலும், கே. கே. எஸ். வீதியில் சிவன் கோவில் சந்திக்கருகே உள்ள 'ஹோம் நீட்ஸ்' மேல்மாடியில் காலையிலும் 3-1-66 திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றன. ஆகஸ்ட் 66, டிசம்பர் 66, ஜி. சி. ஈ. சிங்களப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் இவ் வகுப்புகளில் 3-1-66 தொடக்கம் 8-1-66 வரை சேரலாம். 1637

கலை, விஞ்ஞானம், வர்த்தகம் (தமிழ்/ஆங்கிலம்) க. பொ. த. ப. (சாதாரணம்/உயர்தரம்) வகுப்புக்களுக்கு 3-1-66 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். 1965 ஆவணி க. பொ. த. ப. பரீட்சையில் 100./சித்தியு வர்த்தகப் பாடங்களில் விஷேட, திறமையான சித்திகளும் பெற்றிருக்கிறார்கள் விபரங்களுக்கு, நிர்வாகி, வர்த்தகக் கல்லூரி, (ஸ்தாபிதம் 1924) பருத்தித்துறை. 1645

### மனக்கணிதங்கள்

திரு. வே. சிவக்கொழுந்து மனக்கணிதங்கள் 2 முதல் ஜே. எஸ். ஸி. வரைக்கும் வெளிவந்துள்ளன. கணிதம் சுலபமாய்ப் பயில அத்திபாரமான கணித அறிவு விருத்தியுற இவை ஏற்றவை விலைப்பட்டியலுக் கெழுதுக. கலாபவனம், வியாபாரிமூலை பருத்தித்துறை. 1618

### தேவை

அனுபவம் வாய்ந்த மருந்து கலப்பவரும், தாதியும், தாதியாகப் பயிற்சிபெற விரும்புவோரும் தீவுப்பகுதி ஐக்கிய வைத்திய சாலைச் சங்கச் செயலாளருக்கு விபரங்களுடன் 15-1-66 க்கு முன் விண்ணப்பிக்கவும். 1626

வெயிட்டர்ஸ் (Waiters) தேவை. 8 மணித்தியால வேலை. ஆங்கிலம் பேசக்கூடியவர் விரும்பத்தக்கது. நல்ல சம்பளம், 1/3, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையத்திற்கு முன், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1650

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள ஒஸ்டின் சோமசெட் EY 5000 தொடர்பிலக்கமுள்ள கார் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1651

சோமசுந்தரம் ஒழுங்கை சுண்டிக்குளியில் மூன்று பெரிய அறைகளுடன் சகல நவீன வசதிகளுடைய வீடு. விபரங்களுக்கு 'ஞான இல்லம்' சோமசுந்தரம் ஒழுங்கை சுண்டிக்குளியில் விசாரிக்கவும். 1647

நல்லூரில் அரசடிச் சந்திக்கும் கந்தசாமிகோவில் மேற்குவீதிச் சந்திக்குமிடையில், ரோட்டுக்கு வடக்கே ''வினைதீர்த்தான்'' என்னும் காணி நிலப்பரப்பு 4 குளி 6; கடை கட்ட நல்லது.—அ. சிவக்கொழுந்து தலைமையாசிரியர், குமரபுரம், பரந்தன். 1424

முட்டையிடும் வெள்ளை லெக்கோன் (Leghorn) பத்து மாதக் கோழிகள். இரத்தினசிங்கம் 29, 4-ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம். 1646

### வாடகைக்கு

ஒன்பது பரப்புக் காணியில் அமைந்த வீடு. மூன்று அறை, சாப்பாட்டறை, ஹோல் மின்சாரம். பிரபல கல்லூரிகள் அருகில் உண்டு. புங்கன்குளம் புகையிரத நிலையம், பஸ் தரிப்புகள் மிக சமீபம், வருமான வாய்ப்பு. விபரங்கட்கு எஸ். குமாரசூரியர், 60, புங்கன்குளம் தெரு, கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம். 1648

### வைத்தியம்

தொய்வு, க்ஷயம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக்இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## இடமாற்றத்தை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் இடமாற்ற உத்தரவை ரத்துச்செய்யும்படி கல்வி இலாகாவையும், காங்கேசன்துறை எம். பி.யையும் வற்புறுத்தியுள்ளனர்.


தேசியலொத்தர்சபை
யாழ்ப்பாணத்திலிருந்து
அதிர்ஷ்டத் தேவதையின் புன்னகை
பென்ஸ்கார் சுவீப் சீட்டிழுப்பு
யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில்
1965 டிசம்பர் 30-ந் திகதி பிற்பகல் 4-15க்கு
பிரமுகர்களினதும் பொதுமக்களினதும்
முன்னிலையில் நடைபெறும்
எல்லோரும் அழைக்கப்படுகின்றனர்
★ பரத நாட்டியம்
★ கண்டிய நடனம்
மற்றும்
கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்
பிரவேசம் இலவசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் வெளியே...

2-ம்பக்கத்தொடர்ச்சி)

றம் பெற்றோர் மீண்டும் வெளி மாகாணங்களுக்குச் செல்லவேண்டுமென வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கப் பிரமுகர்களும், வடமாகாண ஆசிரியர் சங்கப்பிரமுகர்களும் கூறுகின்றனர். 1-7-63ல் நடைபெற்ற மாற்றத்தில், மாற்றம்பெறுவோர் தொகை சம்பந்தமாகத் தீர்மானிப்பதற்காகக் கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் திரு. கு. வி. செல்லத்துரை தலைமையின்கீழ் கூடிய அகில இலங்கைத் தமிழாசிரிய சங்க நிர்வாகசபையில் 125 ஆசிரியர்களை மாற்றம் செய்வதற்கு வடஇலங்கைத் தமிழாசிரிய சங்கப் பிரதிநிதிகள் சம்மதிக்கவில்லையா? இம்முடிவு உதவிவித்தியாதிபதி டாக்டர் ஆனந்தகுருகேயிடம் தெரிவிக்கப்படவில்லையா? இந்த 125பேரில் வெளிமாகாணங்களில் 10 வருடங்களுக்குமேல் சேவை செய்தவர்களில் 102 ஆசிரியர்கள் மட்டுமே மாற்றம் பெற்றனா. இவர்களின் இடத்தை நிரப்புவதற்காக வட இலங்கையிலேயிருந்து செல்ல வேண்டியவர்களில் ஒருபகுதியினர் தென்னிலங்கையை நோக்கிச் செல்ல ஆசிரியசங்கங்களின் செல்வாக்கைப் பெற்றவர்களில் ஒருசிலரும், அரசியல்வாதிகளின் செல்வாக்கைப் பெற்ற சிலரும் வட இலங்கையில் தங்கிவிட்டனர். இதனாலேயே தென்னிலங்கையில் பற்றாக்குறை ஆசிரியர்கள் நிலையேற்பட்டுவிட்டது. தென்னிலங்கையிலிருந்து 10வருடசேவைக்கு மேற்பட்டவர்கள் வடஇலங்கைக்கு மாற்றம்பெற்ற திகதியாகிய 1-7-63லிருந்து இற்றைவரை வட இலங்கையிலிருந்து தென்னிலங்கைக்கு மாற்றப்படுவோர் எத்தனை வருடங்களின் பின் சொந்த இடங்களுக்கு மாற்றப்பட வேண்டுமென்னும் திட்டத்தை அ. இ. த. ஆ. சங்கம் அரசினருக்கு எடுத்துக்கூறவில்லை.

ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாகக் கல்விப்பகுதியினர் கையாளும் திட்டங்களை ஆசிரிய சங்கங்கள் கண்டிக்கின்றன. ஆனால் உருப்படியான ஒரு திட்டத்தை வகுத்துக் கல்விப்பகுதியினருக்குக் கொடுத்து, அதனை நடைமுறைக்குக் கொண்டு வரமுடியவில்லை. ஆனால் வெளிமாகாணங்களிலிருந்து மாற்றம்பெற்றுவந்த ஆசிரியர்களை மீண்டும் வெளி மாகாணங்களுக்கு அனுப்ப வேண்டுமென முயற்சிசெய்கின்றனர். ஆகவே 1-1-60 இன் பின் வெளிமாகாணங்களிலிருந்து மாற்றம்பெற்று வந்த ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து எமது நிலையைப் பொதுமக்களுக்கும், அரசாங்கத்திற்கும் தெளிவுபடுத்தவேண்டும்.

சி. சின்னத்தம்பி
யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

## காணவில்லை

ஐந்து வயது நிரம்பியவரும், கருமை நிறமுடையவரும், சுமார் இரு அடி உயரமுள்ளவருமான எனது பெண் குழந்தையைக்காணவில்லை. இவர் காணமற்போன சமயத்தில் மஞ்சள் நிற சீத்தை சட்டை அணிந்திருந்தார். இவரை எம்மிடம் சேர்ப்பிப்பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். பின்வரும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். ச. சீனித்துரை, புறப்பத்தை வீதி, கொக்குவில் கிழக்கு.

1644

## "பலியிடுதலை நிறுத்துக"

சுழிபுரம், ஞாயிறு

அண்மையில் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட சுழிபுரம் பத்திரகாளிகோவில் பலிநிறுத்தம் சம்பந்தமான தீர்ப்பையடுத்து அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் பலியிடுதல் செயலைக் கைவிடும் படி பொதுமக்கள் சார்பில் கோவில்முகாமையாளர்களை கேட்டுக்கொள்ளும் ஒருதீர்மானம் சுழிபுரம் கிராம சபை மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்கு கிராம சபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி ஜே.பி. தலைமை வகித்தார்.

## கல்விக்கு செயற்கை கிரகம்

சென்னை, டிச. 26

செயற்கைக் கிரகத்தை கல்வி போதனைக்கு உபயோகிக்கவேண்டும் என ஐ. நா. கல்வி, சமூக, கலாச்சார ஸ்தாபனம் கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாக 'யுனெஸ்கோ' உதவி டைரக்டர் ஜெனரல் திரு. ஆதிசேஷையா இங்கு கூறினார்.

## பழனிமலைக்கு மின்சார ஏணி

சென்னை, டிச. 26

பழனிமலையின் அடிவாரத்திலிருந்து மலை உச்சிக்கு மின்சார லிப்டை அடுத்த மாதம் 17-ந் திகதி முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் ஆரம்பித்துவைப்பார். இந்த ஏணி அமைப்புக்கு ரூ. மூன்று லட்சம் செலவாகியது. ஒரே சமயத்தில் 32 பேர் இதில் செல்லலாம். 10 முதல் 12 நிமிடத்தில் இதன்மூலம் உச்சியை அடையலாம். அதிக யாத்திரிகர்கள் செல்லும் மற்றுமொரு ஏணியை அமைக்கவும் ஏற்பாடு செய்யப்படும் என முதன்மந்திரி கூறினார்.

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்.

நல்லூர்தெற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகரசபைத் தெரிவும் திரு. பொ. புண்ணியசிங்கத்தின் தலைமையில் நடைபெற்றது. தனாதிகாரி தனது 1965-ம் ஆண்டுக்குரிய வரவுசெலவுக் கணக்கைச் சமர்ப்பித்திருந்தார். வரவு செலவு சபையில் ஏகமனதாக நிறைவேறியது.

தனாதிகாரி கணக்கில் இலாபம் காட்டியதையும் அவரது சேவையையும் பலர் பாராட்டிப் பேசினார்கள். இதைத்தொடர்ந்து தற்காலிகத்தலைவர் பொ. ஏரம்பு தலைமையில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் பொ. ஏரம்பு, உபதலைவர்: திரு. ம. புஷ்பராசா, செயலாளர்: திரு. இ. துரைராசா, உபசெயலாளர்: ம. பற்குணம், தனாதிகாரி: வ. நாகேந்திரன், உபதனாதிகாரிகள்: திரு. க. வேந்திரமூர்த்தி, அ. இரத்தினம், இ, செல்வமாணிக்கராசா.

நிர்வாகசபை உறுப்பினர்கள்: திரு. பொ. புண்ணியசிங்கம், ட. முத்துராசா, வ. சுந்தரேசன், க. நவரத்தினராசா. சி. நவரத்தினம், கணக்குப்பரிசோதகர்: திரு. க. செல்லத்துரை.

# 'பெறற்கரிய நற்குருவே நாவலர் பெருமான்'

சிதம்பரம், டிச. 27

"பத்தொன்பதாம் நூற்றூண்டிலே தோன்றி நற்றமிழ் நலியாது ஓங்கவும் சைவத்திருநெறி தழைத்து விளங்கவும் அருந்தொண்டு ஆற்றிய நற்றவப் பெரியார்தான் ஆறுமுகநாவலர்பெருமான்" என்று திருப்பெருந்திரு ஆறுமுகநாவலர் பெருமான் 86-ம் குருபூசைவிழா சிதம்பரம் ஆறுமுகநாவலர் உயர்நிலைப் பாடசாலையில் கொண்டாடப்பட்ட பொழுது வரவேற்புரை நிகழ்த்திய திரு. க. இராசேசுவரன் கூறினார்.

"ஆறுமுகநாவலர் பெருமானை, நாம் பெறற்கரிய நற்குருவாகக்கொண்டு, போற்றி வழிபட்டு பாராட்டுரை வழங்குகின்றோம். நம்மை ஆட்கொண்ட அப்பெருந்தகையாரின் நல்லியல்புகளையும் அரும்பெரும் செயல்களையும் செவியாராக் கேட்டு அப்பேரறிஞர் வகுத்துப்போந்த வழியினின்றும் வழுவாமல் கடைப்பிடித்து ஒழுக, நாம் நமது உள்ளத்தில் மென்மேலும் உறுதி கொள்ளவேண்டும்" என்றும் அவர் கூறினார்.

## சிதம்பரத்தில் சிறப்பாக நிகழ்ந்த நாவலர் குருபூசை

சிதம்பரம், டிச. 27

நாவலர் குருபூசை சிதம்பரம் ஆறுமுகநாவலர் உயர்நிலைப்பாடசாலையில் நடைபெற்றது. அன்று காலை சேக்கிழார் ஆலயத்தில் நாவலர் பெருமான் திருஉருவப்படத்திற்கு வழிபாடு நடந்தது. பின்னர் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் நாவலர் திருஉருவப் படத்திற்கு வழிபாடு நடந்தது. பின்னர் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் நாவலர் திருஉருவப்படத்தை வைத்து அதன் முன்னிலையில் பெருமானுடைய முதற்பதிப்பு நூல்கள் இருபதைப் பட்டாடையால் அலங்கரித்து அடியார்கள் சுமந்து செல்ல ஊர்வலம் ஆரம்பமாயிற்று. வீதிதோறும் பூரணகும்பங்கள் வைத்து அன்பர்கள் பலர் ஆராதித்தனர்.

ஊர்வலம் உயர்நிலைப் பாடசாலையை அடைந்ததும் குருபூசை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின சற்குருமணிமாலையிலிருந்து பாட்டுக்கள் ஓத, அவருக்குப் பிரியமான ரேசா புஷ்பாஞ்சலியும் தீப ஆராதனையும் நடைபெற்றன. கலந்துகொண்ட 1500 க்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் சிற்றுண்டியும் பழமும் வழங்கப்பட்டன. பின்னர் தில்லை அம்பலவாணர் கோவிலில் திருமுழுக்கு வழிபாடு அன்னப்பாவாடையுடன் நடைபெற்றது.

பாடசாலையில் சமுகம் கொடுத்தோருக்கும் ஏழைகளுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை நிகழ்ச்சிகளுக்குத் திருமுருக கிருபானந்தவாரியார் தலைமைவகித்தார். நாவலர் இயற்றிய கீர்த்தனைகளும் நாவலரைப் பற்றிய தோத்திரங்களும் போட்டியாகப் பாடப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மு. செ. விவேகானந்தன் என்னும் மாணவருக்கு முதற்பரிசில் கிடைத்தது. தலைவரின் சொற்பொழிவின் பின் திருமதி கலைச்செல்வி 'சேக்கிழாரும் நாவலரும்' என்ற பொருள்பற்றி உபந்நியாசம் செய்தார்.

குருபூசையைச் சிறப்பாக நடத்திய நாவலர் அறநிலையக்காப்பாளர் திரு. க. இராசேஸ்வரனையும் விழாவையும் பாராட்டி அனுப்பட்ட வாழ்த்துச்செய்திகள் வாசிக்கப்பட்டன. நாவலர் இயற்றிய மங்களகீதம் மாணவர்கள் பாட விழா நிறைவுற்றது.

## சின்னவெங்காயத்துக்கு கட்டுப்பாட்டு விலை

### யாழ்ப்பாணத்தில் ரூத்தல் 31 சதம்

யாழ்ப்பாணம், செவ்.

சின்ன வெங்காயத்துக்கு கட்டுப்பாட்டு விலைவிதிக்கப் பட்டுள்ளது. இதுசம்பந்தமான அறிவித்தல் இம்மாதம் 10-ந்திகதி வெளியான இலங்கை அரசாங்க வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் காரியாதிகாரி பிரிவில் ஒரு ரூத்தல் சின்னவெங்காயத்தின் ஆகக்கூடுதலானவிலை 31 (முப்பத்தியொன்று) சதமாகும். அந்தரின்விலை 26 ரூபா 92 சதமாகும்.

சின்ன வெங்காயத்துக்கு கட்டுப்பாட்டுவிலை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து சின்ன (ஈர) வெங்காயத்தை மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பனை செய்யும் ஒவ்வொரு வியாபாரியும் சின்னவெங்காயத்தை வாங்குவோர் கேட்குமிடத்து பாவனையாளர்களுக்கு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு கொடுக்க வேண்டுமென்று யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

விற்பனை நடந்த திகதி, விற்பனை செய்த வெங்காயத்தின் தொகையும் நிறையும், விற்பனை செய்த வெங்காயத்திற்கு [illegible] கொடுக்கப்பட்ட விலை, சில்லறை விற்பனையா அல்லது மொத்த விற்பனையா ஆகியவற்றை வியாபாரி குறிப்பிடவேண்டும்.

யாழ்ப்பாணம் பகுதிகளும் விலைப்பட்டியலும் வருமாறு:—

○ யாழ்ப்பாணம் காரியாதிகாரி பிரிவு: (யாழ்ப்பாணம் மநகரசபை எல்லைகளை உள்ளடக்கியது) அந்தர்—26ரூபா 92 சதம். ரூத்தல் 31 சதம். ○ வடமராட்சி காரியாதிகாரி பிரிவு: அந்தர் 27ரூபா 37சதம். ரூத்தல்31 சதம். ○ வலிகாமம் மேறகு காரியாதிகாரிபிரிவு: அந்தர்—27ரூபா 27சதம். ரூத்தல் 31 சதம். ○ வலிகாமம்வடக்கு காரியாதிகாரி பிரிவு: அந்தர்—27ரூபா 17 சதம் ரூத்தல் 31 சதம்.

○ நெடுந்தீவு காரியாதிகாரி பிரிவு: அந்தர்— 28 ரூபா 59சதம். ரூத்தல் 33 சதம். ○ தீவுப்பகுதி காரியாதிகாரியின் பிரிவு: (நயினாதீவு, அலைதீவு, எழுவைதீவு தவிர்ந்த கிராம எல்லைகள்) அந்தர் —27 ரூபா 37 சதம். ரூத்தல் 31சதம். ○ தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவில்: நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு கிராம சபை எல்லைகள்: அந்தர்— 27 ரூபா 83 சதம். ரூத்தல் 32சதம். ○ தென்மராட்சி காரியாதிகாரி பிரிவு: அந்தர்—27ரூபா 29 சதம். ரூத்தல் 31 சதம். ○ பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி பிரிவு: அந்தர்—27 ரூபா 46சதம். ரூத்தல் 32 சதம். ○ கிளிநொச்சி காரியாதிகாரி பிரிவு: அந்தர்— 27 ரூபா 59 சதம். ரூத்தல் 32 சதம். ○ துணுக்காய் காரியாதிகாரிபிரிவு: அந்தர்—28 ரூபா 01சதம். ரூத்தல் 32 சதம். ○ பூநகரி காரியாதிகாரி பிரிவு: அந்தர்—27 ரூபா 66 சதம். ரூத்தல் 32 சதம்,

## "தலைமை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இல்லாமல் உயர்வகுப்புக்களைநடத்தவேமுடியாது. அம்மாணவர்கள் தொடர்ந்து இபபாடசாலையில் படிப்பதால் அவர்களின் கல்வி பாதிக்கும். ஆதலால், இடமாற்றம் ரத்துச்செய்யப்பட்டாவிடில் மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்குச் செல்வது நல்லது. ஆசிரியர்கள் இடமாற்றத்தை எல்லோரும் தோளோடு தோள் நின்று எதிர்க்கவேண்டும். வெற்றி கிட்டும்வரை முழுமூச்சுடன் போராடவேண்டும்.

பண்டிதர் பொன்னுத்துரை பேசும்போது, இடமாற்றத்தில் உள்ள பிழைகளைத் திருத்தும்வரை, ஒத்திவைத்து, ஆசிரியர் சங்க பிரதிநிதிகளை கொண்ட ஒரு மாற்றுச்சபையைஏற்படுத்த வேண்டும் என்று கூறினார்.

திரு. வைத்திலிங்கம் பேசும்போது அண்மையில் ஹெட்டி ஆராய்ச்சியைப் பேட்டிகண்டபோது மாற்றத்தில் எவ்வித கஷ்டம் இல்லையென்றும் வடமாகாணத்திலிருந்து சிறுதொகையினரை தென்மாகாணத்திற்கும், தென்மாகாணத்திலிருந்து சிறுதொகையினரை வடமாகாணத்திற்கும் அனுப்பியுள்ளோமென்று கூறியதாகத் தெரிவித்தார்.

இந்த இடமாற்றத்தை ஆட்சேபித்து ஒவ்வொரு தலைமையாசிரியர்களும், அதிபர்களும், தங்கள் தொகுதி எம். பி.க்கு கடிதம் எழுத வேண்டுமென கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

சில பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களுக்குமாற்றக் கடிதம் அனுப்பப்படவில்லையென்றும், ஆதலால் சரியான மாற்றத்திட்டம் ஏற்படுத்தும்வரை இடமாற்றத்தை பின்போட வேண்டும் என்றும் கூறப்பட்டது.

### தீர்மானங்கள்

பாடசாலைகளில் ஆசிரியர்களை உள்ளூர் வெளியூர்களுக்கு மாற்றும்போது தலைமையாசிரியர்களை கலந்தாலோசியாது செய்யக்கூடாதென இச்சபை ஏகமனதாக வேண்டிக் கொள்கிறது.

1-1-66ல் இடமாற்றம் பெறுவதாக அறிவித்தல் கிடைத்துள்ள ஆசிரியர்சளில் பலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதால், அவர்களது நியாயங்களை விசாரித்து ஒரு தீர்வு காணும் வரை அவர்களை அவ்வப் பாடசாலைகளில்தொடர்ந்து கடமையாற்ற அனுமதியளிக்கப்பட வேண்டுமென வித்தியாதிபதியைக் கேட்டுக் கொள்கிறது.

1-1-66ல்நடைபெறவிருக்கும் ஆசிரியர்மாற்றம் தலைமையாசிரியர்களை ஆலோசிக்காமலும், திட்டமில்லாமலும் நடைபெறுகிறது. இதனால் எமது பாடசாலைகளில் நிர்வாகம் தடைபடுவதுடன் கல்வியின் தரமும் பெரிதும் பாதிக்கப்படும். ஆகவே இம்மாற்றத்தை உடன் பின்போடுமாறு கல்விமந்திரியையும் வித்தியாதிபதியையும் கேட்டுக் கொள்கிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org